இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 82 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 15 – ஞாயிற்றுக்கிழமை 01 நவம்பர் 2026 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 82 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 15 - Sunday 01 November 2026 - Dak 12 Pages ₹ 5.00

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தலைமையில் மகளிர் ஆர்த்தெழுந்த காட்சி!



செயலற்ற டம்மி முதலமைச்சர் ஆட்சியில் சட்டம் ஒழுங்குச் சீர்கேடு பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பின்மை – விலைவாசி உயர்வைக் கண்டித்து வடசென்னையில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மகளிர் அணியினர் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர். இதில் மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் மற்றும் கழக மகளிர் அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

செயலற்ற 'டம்மி' முதலமைச்சர் ஆட்சியில் சட்டம் ஒழுங்குச் சீர்கேடு - பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பின்மை – விலைவாசி உயர்வைக் கண்டித்து

தமிழகம் முழுவதும் தி.மு.க. மகளிர் அணியினர் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

லட்சக்கணக்கானோர் திரண்டனர்! வடசென்னை ஆர்ப்பாட்டத்தில்

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தலைமையில் பல்லாயிரவர் பங்கேற்பு!

சென்னை, நவ.1–

சட்டம் ஒழுங்குச் சீர்கேடு – பெண்கள் – குழந்தைகள் பாதுகாப்பின்மை – மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், நேற்று (31.10.2026) நடைபெற்றது.

சென்னை வடக்கு மாவட்டத்தில் நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்றார்.

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர்கேட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தைப் படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று (31.10.2026 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடைபெற்றது.

அந்தந்த மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மகளிர் அணி நிர்வாகிகள் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர்.



1. சென்னை வடக்கு - **கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி, வனிதா குமாரி**
2. கன்னியாகுமரி - **ஹெலன் டேவிட்சன், நாஞ்சில் சிபி**
3. சேலம் - **நாமக்கல் ராணி.**
4. தூத்துக்குடி - **கீதா ஜீவன், ஜெஸி பொன் ராணி**
5. கோயம்புத்தூர் - **வீரமணி J.K, கலாவதி**

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்